2022 மே 10]

வேப்பூர் ஆகிய தாலுகாக்களிலும் சார்நிலைக் கருவூலங்கள் இல்லை. அங்கும் சார்நிலைக் கருவூலங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டு, அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வகைகளிலும் மக்களைத் தேடி சேவை செல்ல வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசாங்கத்தின் இலக்கு, கொள்கை. அதனால்தான் "மக்களைத் தேடி மருத்துவம்", "இல்லம் தேடி கல்வி" என்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதே அடிப்படையில், எத்தனை ஓய்வூதியதாரர்கள் இருக்கின்றார்களோ, எத்தனை பணியாளர்கள் இருக்கின்றார்களோ, எல்லோருக்கும் direct transfer மூலம் bank—ல் போய் சேருகின்ற மாதிரியும், அதில் புகார் வந்தால் Call Centre மூலமாக அதை நிறைவேற்றும்வகையிலும் செயல்படுவதுதான் தொலைநோக்குப் பார்வையினுடைய அடிப்படைக் கொள்கை. எனினும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலைக்கு, எங்கே physical office தேவை என்பதை அறிந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அங்கே பலருக்கு சிக்கல்கள் இருக்கும் என்று அறியவந்தால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

259—

பள்ளிவாசல் புனரமைத்தல்

***7852—திரு. சீ. கதிரவன்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர், நங்கமங்கலம் சத்திரத்தில் உள்ள முகமதிய கோரி பள்ளிவாசல் மற்றும் மண்டபத்தைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 7,504 வக்ஃப்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட அந்த வக்ஃப்களில் 1999 முதல் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 40 இலட்சம் ரூபாயில் பொது மராமத்துப் பணியை துவக்கி வைத்து, இன்றைக்கு மக்கள் முதல்வர் தளபதியார் அவர்கள் ரூ.6 கோடி வழங்கியுள்ள நிலையில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள், திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட நங்கமங்கலம் சத்திரத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த முகமதிய கோரி பள்ளிவாசலைப் புனரமைக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு மட்டுமே பொது மராமத்து மானியம் வழங்கப்பட்டு வருவதால், வக்ஃப் வாரியச் சட்டத்தின்படி, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் இப்பள்ளிவாசலின் நிர்வாகம் பதிவு செய்து, அதன்பின்னர், புனரமைப்பிற்காக மானியம் கோர விண்ணப்பித்தால், அரசு மானியம் பெற வழிவகை உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்து, அவையில் உள்ள அத்துணை உறுப்பினர்களுக்கும் இந்தச் செய்தியைப் பதிவு செய்து, பதிவு செய்யாத வக்ஃப்களை பதிவு செய்து பலனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.

திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்து, அதன்பிறகு மானியம் பெறலாம் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட நங்கமங்கலம் சத்திரத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு, முதன்முதலாக கட்டப்பட்ட முகமதிய கோரி என்ற புனித

2022 மே 10]

பள்ளிவாசலின் வாயிலாகத்தான் சுற்றுவட்டார இஸ்லாமிய சகோதரர்கள், இஸ்லாமிய மார்க்கத்தை பல தலைமுறைகளாகக் கற்று வழிபாடு செய்து கொண்டு வருகின்றனர். இந்தப் புனித பள்ளிவாசலை வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்ய விண்ணப்பிக்கும்பட்சத்தில், அதற்கு விரைந்து ஒப்புதல் வழங்கி சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7,504 வக்ஃப்களில் 3,470 பதிவு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் நம்முடைய மக்கள் முதல்வர் தளபதியார் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 500-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இப்போது ஆர்வமாக பதிவு செய்ய வரப்பெற்றுள்ளன. அதில் இந்த பள்ளிவாசலின் விண்ணப்பமும் வந்தால் உடனடியாகப் பதிவு செய்து நிதியினை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில், இந்த ஆண்டு கூடுதலாக நிதி கேட்டவுடன், ரூ.6 கோடியை, ரூ.7 கோடியாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். நிறைய விண்ணப்பங்கள் வந்தால் இன்னும் மேற்கொண்டு நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் பெற்றுத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.*

திரு. சீ. கதிரவன்: *எனது மண்ணச்சநல்லூர் பகுதியைச் சுற்றி சுமார் 2500-க்கும் மேற்பட்ட இஸ்லாமிய குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு கபர்ஸ்தலமானது புள்ளம்பாடி வாய்க்கால் அருகில் சுமார் 5 சென்ட் நிலத்தில் மட்டும் இருப்பதால், பல சிரமங்களைச் சந்திக்கும் சூழ்நிலையுள்ளது. எனவே, அவர்களுக்கு வேறு இடத்தைத் தேர்வு செய்து வழங்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், சென்னை, திருச்சி போன்ற பெருநகரங்களில் கிறிஸ்தவர்களின் அடக்க ஸ்தலங்களுக்குத் தேவையான இட வசதியினை வழங்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி வரவேற்கக்கூடியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் அனைத்து ஊராட்சிகளில் உள்ள சுடுகாடு, இடுகாடுகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று, உள்ளாட்சித் துறைமூலமாக நிதியினை ஒதுக்கிக் கொடுத்து, சுற்றுச்சுவர் அமைத்துக்கொடுத்தார். அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகளையெல்லாம் செய்துகொடுத்தார். அந்த அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு மக்கள் முதல்வர் தளபதியார் அவர்கள் இன்றைக்கு கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் அடக்கம் செய்வதற்காக அவர்களுக்கு இடம் தேர்வு செய்து கொடுப்பதும், அரசு சார்ந்த இடங்களாக இருந்தால் அந்த இடத்தை ஒதுக்கிக்கொடுப்பதும், தனியாருக்குச் சொந்தமான இடமாக இருந்தால் அந்த இடத்தை விலை பேசி, அவர்களின் ஒத்துழைப்போடு அந்த இடத்தை வாங்கிக்கொடுத்து, அது இஸ்லாமிய சகோதரர்களின் கபர்ஸ்தலமாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களின் அடக்க ஸ்தலமாக இருந்தாலும் சரி, அதற்கான முதல் தவணையாக தாயுள்ளத்தோடு ஒரு கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அனைத்து உறுப்பினர்களும் தேவைக்கேற்ப அந்தந்தப் பகுதியில் அந்த இடத்தை பேசி வாங்கிக்கொடுக்கலாம். அதேநேரத்தில் அரசு இடத்தைச் சுட்டிக்காட்டினாலும், அரசாங்கம் அதனை அளிக்கத் தயாராக இருக்கிறது; இடத்தினையும் பெற்று ஒதுக்கீடு செய்து தருவதற்கு தயாராக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடக்கஸ்தலங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருக்கின்ற அடக்கஸ்தலங்களில் மீண்டும் அடக்கம் செய்வதற்காக கொடுத்திருக்கின்ற நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். அதுமட்டுமல்லாது, தாங்களும் அறிந்திருப்பீர்கள், தாங்கள் சார்ந்திருக்கின்ற நெல்லை மாவட்டத்திலும் இதுகுறித்து அறிந்திருப்பீர்கள். குறிப்பாக, சென்னை மாநகராட்சியில் இப்போது போதுமான இடம் இல்லை. கொரோனா மற்றும் பேரிடர் காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட ஒரு மிகப்பெரிய பிரச்சினை, அவர்கள் இறந்தவுடன் அடக்கம் செய்வதற்கு இடம் உடனடியாக இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக கிறிஸ்தவப் பெருமக்கள் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கேற்ற வகையில் தமிழகம் எங்கும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலே இதனை முன்வைக்கின்ற நேரத்தில் அந்த அடக்கஸ்தலத்திற்குத் தேவையான இடங்களையும், அடக்கம் செய்கின்ற இடத்தில் சீரமைக்கின்ற பணிகளையும் ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று தாயுள்ளத்தோடு சொல்லியிருக்கிறார்கள். நிதியும் ஒதுக்கீடு செய்து, அந்த அடிப்படையில் சென்ற மானியக் கோரிக்கையில்கூட, சென்னையில் இருக்கின்ற அடக்கஸ்தலத்திற்கு உரிய பாதுகாப்பான சட்டங்களை இயற்றி, தளர்த்திக் கொடுக்கின்ற வகையில், சென்னையில் உள்ள கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு அடக்கஸ்தலங்கள் அமைப்பதற்கான புதிய நிலங்களைக் கையகப்படுத்தவும், சென்னையில் ஏற்கெனவே உள்ள அடக்கஸ்தலங்களில் மீண்டும் அடக்கம் செய்வதற்காகவுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தவும்*

நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வறிவிப்பு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேலும், சென்னையில் வசிக்கும் கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு அடக்கஸ்தலம் அமைக்க போதிய இடம் வழங்குவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. 2 ஏக்கர் அளவிற்குக்கூட அந்த இடத்தினை வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ள நிலையில்தான், மானியக்கோரிக்கை விவாதத்தில் அதைப் பதிவு செய்துள்ளோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதல் தவணையாக ஒரு கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அதையும் மன்ற உறுப்பினர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில், தர்காக்களையும், தேவாலயங்களையும் புனரமைப்பதற்குக்கூட இரண்டு கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். எங்கெங்கே தகுதி வாய்ந்த தேவாலயங்களும், தர்காக்களும் தேர்வு செய்யப்படுகிறதோ, அவற்றிற்கெல்லாம் நிதியை வழங்க துறை தயார் நிலையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லி எனது பதிலை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் தொகுதியின் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இலங்கை தமிழர் மறுவாழ்வு மையம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அதனை ஆய்வு செய்து, கடந்த பத்து ஆண்டுக் காலமாக அடிப்படை வசதி இல்லாமல், குடியிருக்கின்ற பகுதிகளெல்லாம் சிதிலமடைந்து இருப்பதை உடனடியாகச் சீர்செய்து தருகிறேன் என்று வாக்குறுதி அளித்து வந்தார்கள். அதுமட்டுமல்லாமல், Multi storey building கட்டி இலங்கை தமிழ் அகதிகளான, ஏறக்குறைய 800 குடும்பங்கள் வாழும் அந்தப் பகுதியினருக்கு நாங்கள் நல்லதைச் செய்து தருகிறோம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். அதை உடனடியாக செய்து தருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மே 10]

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை நியாயமானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில்தான் தமிழகத்திலுள்ள 106 முகாம்களை நேரடியாக துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை வைத்து ஆய்வு செய்தோம். அப்போது அவரும் உடன் வந்தார்கள். அவருடைய கோரிக்கைகளையெல்லாம் என்னிடத்திலே கொண்டு வந்து கொடுத்தார்கள். முகாமில் இருப்பவர்களுக்கு கொரோனா நிதி வழங்கப்படுகிறது, முகாமிற்கு வெளியே இருப்பவர்களுக்கு கொரோனா நிதி வழங்க வேண்டும் என்று மன்ற உறுப்பினர் என்னுடைய கவனத்திற்கு எடுத்து வந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வந்து இதனைச் சொன்னவுடன், உடனடியாக அதனை ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகாமிற்கு வெளியே இருக்கின்ற இலங்கை தமிழர்களுக்கு கொரோனா நிதியையும் கொடுத்தார்கள். அந்த முகாமில் இருக்கின்ற அனைவருக்கும் வீடு கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 317 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அங்கே தேவையான அளவிற்கு அனைத்து வசதி வாய்ப்புகளுடன், உடனடியாக வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தினுடைய தலைவர், தமிழக முதல்வர் அவர்களையும், எங்களை இயக்குகிற இளந்தலைவர் அவர்களையும் வணங்கி, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியென்றாலும்கூட, அவர் சார்ந்திருக்கிற துறை சார்பான ஒரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன்.

சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல்களில் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு வாக்களிக்கிற உரிமை என்பதற்கான ஒரு பட்டியல் வெளியிடப்படுகிறது. ஆனால், தனித்த வாக்காளர் பட்டியல் இணைக்கப்படவில்லை. எங்கள் தொகுதியில் சுமார் 2,000-க்கும் மேற்பட்டோர் சிங்கப்பூர்,

மலேசியா, துபாய் போன்ற வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொருத்தமான செய்திதான் இது. எனவே, வெளிநாடுகளில் வாழக்கூடிய தமிழர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான ஒரு தெளிவான வரையறையை, சரியான அட்டவணையை தேர்தல் ஆணையத்திடம் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி பெற்றுத் தருவாரேயானால், வெளிநாடு வாழ்கின்ற தமிழர்கள் எல்லோரும் தமிழக முதல்வரை நம்பி வாக்களிக்கக் காத்திருக்கிறார்கள். எனவே, அந்த அரிய பணியை மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி செய்து தருவார்களா என்று இந்த அவையில் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வி, உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் கடமையாற்றுகின்ற உணர்வோடு உள்ள கேள்வியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் மனதார வரவேற்பார்கள். கொரோனா காலத்தில் 80 வயது ஆனவர்கள் அவர்களின் இல்லத்திலிருந்தே வாக்களிக்கின்ற நிலையினை தேர்தல் ஆணையம் அனுமதித்திருந்தது. அதே நேரத்தில் இராணுவத்தில் பணிபுரிகின்றவர்களுக்கு வாக்குரிமை அளிக்கின்ற வகையில், அவர்கள் இந்திய நாட்டில் எந்தப் பகுதியில் இருந்தாலும், அந்தந்த மாநிலத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் அவர்கள் வாக்களிக்கின்ற உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதைப்போல, கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில், வாக்குச்சாவடி பகுதியில் அவர்களுடைய பெயர் உள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தில் வாக்களிக்கின்ற உரிமையைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் துறை சார்பாக அந்தக் கோரிக்கையினை வைத்து, அதனை நிறைவேற்றுவதற்கான முழு முயற்சியினை துறை எடுக்கும். ஏனென்று சொன்னால், கடல் கடந்து தமிழர்கள் வாழ்ந்தாலும், கடல்தான் பிரிந்திருக்கிறது, நாம் அனைவரும் தமிழரோடு, தமிழ் உணர்வோடு இணைந்திருக்கின்றோம் என்று

2022 மே 10]

சொல்கின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். இன்றைக்குக்கூட இலங்கையில் பொருளாதாரச் சிக்கலில் தவிக்கின்ற மக்களுக்கு உதவி செய்கின்ற விதமாக தாயுள்ளத்தோடு 123 கோடி ரூபாய்க்கு உணவு, மருந்து, பால் பவுடர் போன்ற பொருட்களை அனுப்புவதற்கு நம் துறை சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள், அனுமதியும் கொடுத்துள்ளார்கள். அதற்கும் இந்த மன்றத்தில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

சுற்றுலாத் தலம்

***3631—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு கடற்கரை மற்றும் ஏரிப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு கடற்கரை மற்றும் ஏரிப் பகுதியினை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.